**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்**

**முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**
**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு மார்ச்திங்கள் 30–ஆம் நாள் திங்கள்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 பங்குனித் திங்கள் 16–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.120/2019**
**CNR No. TNSA01-001772-2019**

**பசுமதி** ...**வாதி**

**–எதிர்–**

**01. தங்கராஜ்**
**02. கன்னியம்மாள்**
**03. கார்த்தி**
**04. கலாராணி** ...**பிரதிவாதிகள்**

இந்த வழக்கில் வாதிக்காக வழக்குரைஞர் **திரு M.தியாகராஜன்** அவர்களும் பிரதிவாதிகளுக்காக வழக்குரைஞர் **திரு A.S.அன்பு** அவர்களும் தோன்றினர். இந்த வழக்கு இறுதி விசாரணைக்கு வந்தபோது இரு தரப்பினரும் எடுத்து உரைத்த வாதங்களை கேட்டும் வாதுரைகளை ஓர்வுசெய்தும் சான்றுகளை ஆய்ந்தும் இந்நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த வழக்கில் இன்று இந் நீதிமன்றம் தீர்ப்புரை பகர்கிறது.

## தீர்ப்புரை

### முகவுரை

வழக்குச் சொத்தில் 1/2 பங்கிற்கு பாகப்பிரிவினை கோரியும் வழக்குச் சொத்தில் வாதியின் 1/2 பங்கிற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் எவ்வித வில்லங்கமும் ஏற்படுத்தக்கூடாது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பிறப்பிக்கக் கோரியும் வழக்கின் செலவுத் தொகை கோரியும் இதர நிவாரணங்கள் கோரியும் உரிமையியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின் 07-ஆம் வகுமுறையின் 01-ஆம் விதியின்கீழ் வாதி இந்த வழக்கைத் தொடுத்துள்ளார்.

III rd ADJ Court Salem

## வழக்குரையின் சுருக்கம்

**01.** வாதி 01-ஆம் பிரதிவாதியின் மகள் ஆவார். 01-ஆம் பிரதிவாதி வாதியின் தாயார் சரோஜாவை 1978-ஆம் ஆண்டு மணந்தார். அவர்களுக்கு வாதி மகளாக பிறந்தார். 01-ஆம் பிரதிவாதி 02-ஆம் பிரதிவாதியுடன் தகாத உறவுகொண்டு வாழ்ந்ததில் 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகள் அவர்கள் இருவருக்கும் பிறந்தனர்.

**02.** வழக்குச் சொத்தும் இதர சொத்துக்களும் 01-ஆம் பிரதிவாதியின் தந்தை குழந்தையண்ண கவுண்டருக்கு மூதாதையர் சொத்தாக கிடைத்தது. குழந்தையண்ணன் இறந்தபின் அவரது மகனும் மகளும் 02.11.2015-ஆம் தேதியன்று நிறைவேற்றப்பட்டு ஓமலூர் சார் பதிவகத்தில் ஆவண எண் 7957/2015 ஆக பதிவுசெய்யப்பட்டப் பாகப்பிரிவினை பத்திரப்படி பாகப் பிரிவினை செய்துகொண்டனர். அப் பத்திரத்தின் A அட்டவணை சொத்து 01-ஆம் பிரதிவாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது. அந்தச் சொத்துதான் வழக்குச் சொத்தாகும்.

**03.** வழக்குச் சொத்துப் பூர்வீகச் சொத்தின் தன்மைகொண்டது. வழக்குச் சொத்தில் 01-ஆம் பிரதிவாதியின் சட்டப்பூர்வமான மகளான வாதிக்கு பிறப்பாலே ½ பங்கிற்கு பாகவுரிமை உள்ளது. குழந்தையண்ணன் இறந்த-பின் வாதியும் 01-ஆம் பிரதிவாதியும் வழக்குச் சொத்துக்களை கூட்டாக அனுபோகம் செய்துவந்தனர். வழக்குச் சொத்துக்களின் வரவு செலவுகளை பகிர்ந்துகொண்டனர்.

**04.** வழக்குச் சொத்துக்களை அனுபோகம் செய்வது சம்மந்தமாக வாதிக்கும் 01-ஆம் பிரவாதிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு

இருவரும் வழக்குச் சொத்துக்களை கூட்டாக அனுபோகம் செய்வதற்கான சுமூகநிலை இல்லை. 11.03.2019-ஆம் நாள் வாதி சில நியாயக்காரர்களை 01-ஆம் பிரதிவாதியிடம் அழைத்துச் சென்று வாதிக்கு உரிமையான ½ பங்கைப் பிரித்துக் கொடுக்குமாறு கோரினார். பாகம் எதுவும் கொடுக்க முடியாது என்று மறுத்த 01-ஆம் பிரதிவாதி வழக்குச் சொத்துக்கள் முழுக்க தனக்கேச் சொந்தமானது என்று சட்டவிரோதமாக உரிமை கோரினார். வழக்குச் சொத்தில் உரிமை கோரினால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று வாதியை மிரட்டினார். வழக்குச் சொத்தில் வாதிக்கு உரிய ½ பாக உரிமைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் வழக்குச் சொத்தில் வில்லங்கத்தை ஏற்படுத்தப் பிரதிவாதிகள் முயற்சிசெய்கின்றனர் என்று வாதிக்குத் தெரியவந்தது. பிரதிவாதி ஆள் பலமும் பண பலமும் மிக்கவர். இந்த வழக்கைத் தொடுப்பதை தவிர வாதிக்கு வேறு வழி இல்லை.

05. ஆகையால், வழக்குச் சொத்தில் ½ பங்கிற்கு பாகப்பிரிவினை கோரியும் வழக்குச் சொத்தில் வாதியின் ½ பங்கிற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் எந்த வில்லங்கமும் ஏற்படுத்தக்கூடாது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பிறப்பிக்கக் கோரியும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் இதர நிவாரணங்கள் கோரியும் வாதி இந்த வழக்கைத் தொடுத்துள்ளார்.

## எதிர்வழக்குரையின் சுருக்கம்

**01–ஆம் பிரதிவாதி தாக்கல்செய்துள்ள எதிர்வழக்குரையை 02 முதல் 04 வரையிலான பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.**

**06.** வாதியின் தாயார் சரோஜாவை 01-ஆம் பிரதிவாதி ஒருபோதும் திருமணம் செய்ததில்லை. சரோஜாவை யார் என்றே 01-ஆம் பிரதிவாதிக்கு தெரியாது. 01-ஆம் பிரதிவாதிக்கும் சரோஜாவிற்கும் எவ்வித தொடர்பு மில்லை. சரோஜா என்பவருடன் 01-ஆம் பிரதிவாதி ஒருபோதும் குடும்பம் நடத்தியதில்லை. 01-ஆம் பிரதிவாதிக்கும் சரோஜாவிற்கும் வாதி பிறக்க-வில்லை. சரோஜாவை 01-ஆம் பிதிவாதி மணந்ததாகவும் அவர்கள் இருவருக்கும் வாதி பிறந்ததாகவும் வாதி வழக்குரையில் சொல்லியுள்ளது இட்டுக் கட்டிய பொய். வழக்குச் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான சங்கதிகளை வாதி புனைந்துக் கூறியுள்ளார்.

**07.** வழக்குச் சொத்துக்களும் வேறு சொத்துக்களும் சேர்ந்து மொத்தம் 2.22 ஏக்கர் நிலம் கோட்டக்கவுண்டம்பட்டி ஊர் புல எண் 30/4-இல் அடங்கி யிருந்தது. அச் சொத்தை 27.09.1944-ஆம் நாள் மதுரகாளிகவுண்டர்**(01-ஆம் பிரதிவாதியின் தந்தைவழி பாட்டனார்)** வாங்கினார். 1959-ஆம் ஆண்டு மதுரகாளி இறந்துவிட்டார். அவரின் மகன்களான குழந்தையண்ணனும் பெருமாளும் வாரிசுரிமையில் அடைந்து அனுபோகம் செய்துவந்து 04.04.1960-ஆம் நாளன்று பத்திரம் மூலம் பாகப்பிரிவினை செய்துகொண்டனர். அந்தப் பாகப்பிரிவினை பத்திரத்தில் A அட்டவணை சொத்தாக காட்டப்பட்ட 1.11 ஏக்கர் நிலம் குழந்தையண்ணனுக்கும் B அட்டவணை சொத்தாக காட்டப் பட்ட மற்றொரு 1.11 ஏக்கர் நிலம் பெருமாளுக்கும் ஒதுக்கப்பட்டன. பெருமாள் 09.01.1962-ஆம் நாளன்று அவருடைய 1.11 ஏக்கர் பாகத்தை ராக்கியண்ண கவுண்டர் என்பவருக்கு விற்றுவிட்டார். அந்த 1.11 ஏக்கரை ராக்கியண்ணனிடமிருந்து குழந்தையண்ணன் 30.04.1963-ஆம் நாளன்று கிரயம் வாங்கினார். புல எண் 30/4-இல் அடங்கிய மொத்த நிலம் 2.22

III rd ADJ Court, Salem

ஏக்கரை குழந்தையண்ணன் தனது தனிபட்டச் சுயசம்பாத்திய சொத்தாக அனுபோகம் செய்துவந்தார்.

**08.** 03.11.1986-ஆம் தேதியன்று குழந்தையண்ணன் இறந்தபின் அவருடைய மகன்களான 01-ஆம் பிரதிவாதி தங்கராஜ், சேகர்,செல்வகுமார் மகள்களான சின்னபொன்னு, சரோஜா, கண்ணாம்பாள் ஆகியோர் வாரிசுரிமையில் அடைந்து அனுபோகம் செய்துவந்து 02.11.2015-ஆம் தேதியன்று பத்திரம் மூலம் பாகப்பிரிவினை செய்துகொண்டனர். அந்த பாகப் பிரிவினை பத்திரத்தில் A அட்டவணை சொத்து 01-ஆம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது. அன்றுமுதல் அச் சொத்தை 01-ஆம் பிரதிவாதி தனிபட்ட முறையில் அடைந்து அனுபோகம் செய்துவருகிறார். அச் சொத்தில் 01 ஆம் பிரதிவாதியை தவிர வாதிக்கோ வேறு எவருக்குமோ எவ்வித உரிமையும் இல்லை. வழக்குச் சொத்துக்கள் மூதாதையர் சொத்து என்று வாதி சொல்லியிருப்பது பொய். வழக்குச் சொத்தில் வாதிக்கு எந்த விதத்திலும் பங்குரிமை இல்லை. வழக்குச் சொத்தில் பாகப்பிரிவினை கோருவதற்கு வாதிக்கு உரிமை இல்லை.

**09.** இந்த வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை. வழக்குரை தவறாக மதிப்பிடப்பட்டு குறைவான நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரங்கள் தவறானது. இந்த எதிர்வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகளுக்கு மாறாக வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் யாவும் பொய். ஆகையால், இந்த வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

III rd ADJ Court, Salem

## வழக்கெழு வினாக்கள்

**10. வாதுரைகள் அவற்றுடன் தாக்கல்செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகியன ஓர்வு செய்யப்பட்டு இவ் வழக்கில் தீர்வுகாணப்பட வேண்டிய பின்வரும் எழுவினாக்கள் வனையப்பட்டன.**

*01) வழக்குச் சொத்துக்கள் வாதிக்கும் 01-ஆம் பிரதிவாதிக்கும் பங்குரிமை யுள்ள பூர்வீகச் சொத்தா?*

*02) வாதி 01-ஆம் பிரதிவாதியின் மகளா?*

*03) வழக்குச் சொத்தில் 1/2 பங்கிற்கு பாகப்பிரிவினை பெற வாதிக்கு உரிமை உள்ளதா?*

*04) வழக்குரையில் கோரியபடி பாகப்பிரிவினை நிவாரணம் பெறுவதற்கு வாதி உரிமையுடையவரா?*

*05) வழக்குரையில் கோரியபடி பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தரத் தடையுறுத்துக் கட்டளை நிவாரணம் பெறுவதற்கு வாதி உரிமை யுடையவரா?*

*06) இந்த வழக்கில் வாதிக்கு வேறு ஏதேனும் நிவாரணங்கள் வழங்க முடியுமா?*

III rd ADJ Court, Salem

## சான்றுகள்

11. வாதி தரப்பில் 04 சான்றாளர்கள் சாட்சியம் அளித்துள்ளனர். 4 சான்றாவணங்கள் குறியீடுச் செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் 02 சான்றாளர்கள் சாட்சியமளித்துள்ளனர். 08 சான்றாவணங்கள் குறியீடுச் செய்யப்பட்டுள்ளன. சாட்சி சான்றாவணமாக ஒரு ஆவணம் குறியீடுச் செய்யப்பட்டுள்ளது.

## 02–ஆம் வழக்கெழுவினாமீதான விவாதமும் தீர்முடிவும்

12. வாதி பசுமதியின் தாயார் சரோஜாவை 01-ஆம் பிரதிவாதி தங்கராஜ் மணம்முடிக்கவில்லை என்றும் 01-ஆம் பிரதிவாதிக்கு வாதி பசுமதி பிறக்கவில்லை என்றும் பிரதிவாதிகள் வாதுரை மூலம் உறுதியாக மறுத்துள்ளதால் வாதி பசுமதியின் தாயார் சரோஜாவை 01-ஆம் பிரதிவாதி தங்கராஜ் மணந்தார் என்ற வாதத்தையும் அவர்கள் இருவருக்கும் வாதி பசுமதி பிறந்தார் என்ற வாதத்தையும் வாதியே முதலில் நிரூபிக்க வேண்டும். மேற்சொன்ன பூசல்களை விவாதித்து முடிவுசெய்ய வாதி பசுமதிக்கு 01-ஆம் பிரதிவாதி தங்கராஜ் உயிரணு தந்தையா என்ற கேள்விக்கு முதலில் விடை காண வேண்டும்.

13. வாதி பசுமதி நிரூபண ஆணையுறுதி தாக்கல்செய்து தனது தரப்பு வழக்கை வலியுறுத்தி சாட்சியம் அளித்துள்ளார். தனது தாயார் சரோஜாவை 01-ஆம் பிரதிவாதி தங்கராஜ் 1978-ஆம் ஆண்டு மணந்தார் என்றும் அவர்கள் இருவருக்கும் தான்**(வாதி)** பிறந்தேன் என்றும் கூறியுள்ளார். வாதி பசுமதியின் பள்ளிச் சான்றிதழ் பதிவுத் தாளில்**(வா.சா.ஆ-01)** தகப்பனார் பெயர் தங்கராசு என்று உள்ளது. வாதி பசுமதியின் ஆதார் அட்டையில்**(வா.சா.ஆ-02)** தகப்பனார் பெயர் தங்கராஜ் என்றுள்ளது. வாதி பசுமதியின் தாயார் சரோஜாவிற்கும் 01-ஆம் பிரதிவாதிக்கும் 1978-ஆம் ஆண்டோ அல்லது வேறு எப்போதோ திருமணம் நடந்து என்று காட்டவோ அவர்கள் கணவன் மனைவியாக வாழ்ந்தார்கள் என்று காட்டவோ எவ்வித ஆவணங்களும் தாக்கல்செய்யப்படவில்லை.



III Add Court Salem

**14.** வாதி தரப்பு 02-ஆம் சான்றாளராக வாதியின் தாயார் சரோஜா நிரூபண ஆணையுறுதி தாக்கல்செய்து சாட்சியம் அளித்துள்ளார். தனக்கும் தங்கராஜிக்கும் 1978-ஆம் ஆண்டில் ஓமலூர் சந்தைப்பேட்டையில் உள்ள ஈஸ்வரன் கோவிலில் இரு குடும்பத்தினரின் விருப்பப்படி திருமணம் நடந்தது என்று சொல்லியுள்ளார். 01-ஆம் பிரதிவாதியும் அவரது குடும்பத் -தினரும் துன்புறுத்தியதால் திருமணம் நடந்தபின் 1-1/2 ஆண்டிற்குபிறகு வாதி கருவில் 7 மாதமாக இருந்தபோது 01-ஆம் பிரதிவாதியை விட்டுப் பிரிந்ததாக கூறியுள்ளார் .

15. 01-ஆம் பிரதிவாதி தங்கராஜ் ஆணையுறுதி தாக்கல்செய்து வாதி தரப்பு வழக்கை மறுத்தும் பிரதிவாதிகளின் எதிர்வாதத்தை வலியுறுத்தியும் சாட்சியமளித்துள்ளார். வாதியின் தாயார் சரோஜாவை தான் ஒருபோதும் மணக்கவில்லை என்றும் சரோஜாவிற்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் சரோஜாவிற்கும் தனக்கும் வாதி பிறக்கவில்லை என்றும் கூறியுள்ளார். குறுக்குவிசாரணையில் வாதியின் தாயார் சரோஜாவிற்கும் தனக்கும் திருமணம் நடந்தது என்றோ தங்களுக்கு வாதி பிறந்தார் என்றோ வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ ஊகிக்கும் வகையிலோ எவ்வித பதிலையும் அவர் கூறவில்லை.

**16.** வாதி தன் மரபணுவையும் 01-ஆம் பிரதிவாதியின் மரபணுவையும் மருத்துவ முறையில் சோதித்துப் பார்த்தால் வாதியின் உயிரணு தந்தை 01-ஆம் பிரதிவாதிதான் என்று நிரூபணம் ஆகும் என்றும் அதனால் இரத்த மாதிரியை வழங்குமாறு 01-ஆம் பிரதிவாதிக்கு ஆணையிட வேண்டும் என்று கோரி வழக்கிடை விண்ணப்ப எண் 02/2021 என்ற விண்ணப்பத்தை

இந் நீதிமன்றத்தில் தாக்கல்செய்திருந்திருக்கிறார். அந்த மனுவிற்கு எதிருரை தாக்கல்செய்த 01-ஆம் பிரதிவாதி மரபணு சோதனைக்கு தனக்கு விருப்பம் இல்லை என்றும் இரத்த மாதிரியை வழங்க முடியாது என்றும் கூறியதால் மரபணு சோதனைக்கு ஒத்துக்கொள்ளாத அவருடைய செயலை அவருக்கு எதிரான சான்றாக ஊகிக்கலாம் என்ற கருத்துரையுடன்(observation) இந் நீதிமன்றம் தள்ளுபடிச் செய்திருக்கிறது. அந்த மனுவை எதிர்த்து மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் வாதி தாக்கல்செய்த **CRP PD No.105/2024**-ஐ மாண்பமை உயர் நீதிமன்றம் மரபணு சோதனைக்கு உட்பட மறுத்த 01-ஆம் பிரதிவாதியின் செயலை அவருக்கு எதிரான அனுமானமாக கொள்ளலாம் என்ற குறிப்புடன் தள்ளுபடிச்செய்தது.

17. வாதி பசுமதியின் பள்ளிச் சான்றிதழிலும் ஆதார் அட்டையிலும் தகப்பனார் பெயர் தங்கராஜ் என்று உள்ளது. வாதியின் தாயார் சரோஜாவின் வாக்காளர் அட்டையில் கணவர் பெயர் தங்கராஜ் என்றுள்ளது. வாதியுடன் மரபணு சோதனை செய்துகொள்வதற்கு 01-ஆம் பிரதிவாதி மறுத்துள்ளதையும் மேற்சொன்ன ஆவணங்களில் 01-ஆம் பிரதிவாதி தங்கராஜின் பெயர் உள்ளதையும் கவனத்தில் வைத்துப் பார்த்தால் மரபணு சோதனை செய்தால் வாதியின் உயிரணு தந்தை 01-ஆம் பிரதிவாதிதான் என்று தெரிய -வரும் என்பதாலே 01-ஆம் பிரதிவாதி தங்கராஜ் மரபணு சோதனைக்கு ஒப்புக்கொள்ளவில்லை என்று கருத வேண்டி உள்ளது. ஆகையால், வாதி பசுமதியின் உயிரணு தந்தை 01-ஆம் பிரதிவாதி தங்கராஜ்தான் என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

III rd ADJ Court, Salem

**18.** வாதியின் தாயார் சரோஜாவே 01-ஆம் பிரதிவாதி தங்கராஜின் சட்டப்பூர்வமான மனைவி என்றும் அவர்கள் இருவருக்கும் பிறந்த வாதியே சட்டப்பூர்வமான மகள் என்றும் வாதியின் தாயார் சரோஜா உயிருடன் இருந்தபோதே 01-ஆம் பிரதிவாதி 02-ஆம் பிரதிவாதியுடன் தகாத உறவு கொண்டு அவர்களுக்கு பிறந்த 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகள் 01-ஆம் பிரதிவாதியின் சட்டப்பூர்வமான மகன், மகள் ஆகமாட்டார்கள் என்றும் வாதி தரப்பில் வாதிட்டனர்.

**19.** சரோஜாவிற்கும் 01-ஆம் பிரதிவாதிக்கும் வாதிதான் முதலில் பிறந்தார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. வழக்குரையில் வாதியின் வயது 39, 03-ஆம் பிரதிவாதியின் வயது 27, 04-ஆம் பிரதிவாதியின் வயது 28 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன வயது குறித்த சங்கதியை பிரதிவாதிகள் மறுக்கவில்லை. சரோஜாவிற்கும் 01-ஆம் பிரதிவாதிக்கும் வாதி முதலில் பிறந்தார் என்ற காரணத்தாலே வாதியின் தாயார் சரோஜா 01 ஆம் பிரதிவாதியின் சட்டப்பூர்வமான மனைவி என்றும் அவர்களுக்கு பிறந்த வாதி சட்டப்பூர்வமான மகள் என்றும் அனுமானம் கொள்ளமுடியுமா அல்லது வாதிதான் தனது வாதத்தை நிரூபிக்க வேண்டுமா என்ற கேள்விகள் எழுகின்றன.

**20.** வாதியின் தாயார் சரோஜாவும் 01 ஆம் பிரதிவாதி தங்கராஜும் கணவன் மனைவியாக வாழ்ந்ததை காட்டும் குடும்ப அட்டை உள்ளிட்ட வேறு அரசு ஆவணங்கள் எதுவும் இல்லை. வாதியின் தாயார் பெயரும் 01-ஆம் பிரதிவாதியின் பெயரும், வாதியின் பெயரும் அடங்கிய அரசு ஆவணங்கள் எதுவும் இல்லை. வாதியின் தாயார் சரோஜாவும் 01-ஆம்

பிரதிவாதியும் சட்டமுறைப்படி திருமணம் செய்துகொண்டனர் என்று காட்டும் ஆவண சான்றுகள் இல்லை. இந் நிலையில் வாதி தரப்பு வாய்மொழி சாட்சியத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு வாதியின் தாயார் சரோஜாவிற்கும் 01-ஆம் பிரதிவாதி தங்கராஜிக்கும் சட்டப்பூர்வமாக திருமணம் நடந்தது என்றும் அத் திருமணத்தில் அவர்கள் இருவருக்கும் வாதி பிறந்தார் என்றும் சொல்ல முடியுமா? என்ற கேள்வி எழுகிறது.

21. தனக்கும் 01-ஆம் பிரதிவாதிக்கும் திருணம் நடந்தது என்று சரோஜா**(வா.சா-02)** சாட்சியம் சொல்லியுள்ளார். சான்றாளர் சுப்ரமணி**(வா.சா-03)** என்பவர் ஆணையுறுதி பத்திரம் தாக்கல்செய்து சொல்லியுள்ள சாட்சியத்தில் வாதியின் தாயார் சரோஜாவிற்கும் 01-ஆம் பிரதிவாதி தங்கராசுக்கும் ஓமலூர் சந்தைப்பேட்டை, ஈஸ்வரன் கோவிலில் திருமணம் நடந்தது என்று கூறியுள்ளார். சான்றாளர் பழனியும்**(வா.சா-04)** அவ்வாறே கூறியுள்ளார். திருமண அழைப்பிதழ் அச்சிடப்படவில்லை என்றும் கோவிலில் திருமண இரசீது வாங்கப்படவில்லை என்றும் திருமணத்தின்போது நிழற்படம் எடுக்கப்படவில்லை என்றும் வாதி தரப்புச் சான்றாளர்கள் அனைவரும் கூறி யுள்ளனர். ஆவணச் சான்றுகள் இல்லை என்பதால் மட்டுமே வாதிகளின் வழக்கை நம்பகத்தன்மையற்றது என்று சொல்ல முடியுமா? என்ற கேள்வி எழுகிறது.

22. சரோஜா சொல்லியுள்ள சாட்சியத்தில் 01-ஆம் பிரதிவாதியும் அவரது குடும்பத்தினரும் துன்புறுத்தியதால் திருமணம் நடந்தபின் 1-1/2 ஆண்டிற்குபிறகு வாதி கருவில் 07 மாதமாக இருந்தபோது 01-ஆம் பிரதிவாதியை விட்டுப் பிரிந்ததாக கூறியுள்ளார். திருமணம் நடந்த 1.5



III rd ADJ Court, Salem

ஆண்டிற்குள் சரோஜா 01-ஆம் பிரதிவாதியை விட்டுப் பிரிந்ததாலும் வாதி பிறப்பதற்குமுன் பிரிந்ததாலும் குடும்ப அட்டை உள்ளிட்ட அரசு ஆவணங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. திருமணம் நடந்ததாக சொல்லப் படும் நாளையும் இந்த வழக்குத் தொடுக்கப்பட்ட நாளையும் கவனத்தில் கொண்டால் அழைப்பிதழ், திருமண இரசீது உள்ளிட்ட ஆவணங்கள் தற்போது கிடைக்க வாய்ப்பில்லை. திருமணம் நடந்ததாக சொல்லப்படும் ஆண்டையும் இடத்தையும் கவனத்தில்கொண்டால் திருமண நிழற்படம் எடுக்கப்பட்டிருப்பதற்கான சாத்தியக்கூறுகள் மிகக் குறைவு. ஆகையால் மேற்சொன்ன சான்றுகள் இல்லை என்பதால் மட்டுமே சரோஜாவிற்கும் 01 ஆம் பிரதிவாதிக்கும் திருமணம் நடக்கவில்லை என்று முடிவுசெய்ய முடியாது என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**23.** வாதி பசுமதியின் உயிரணு தந்தை 01-ஆம் பிரதிவாதிதான் என்று இதற்குமுன் முடிவுசெய்யப்பட்டுள்ளது. 01-ஆம் பிரதிவாதிக்கும் 02 ஆம் பிரதிவாதிக்கும் பிறந்த 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகளுக்குமுன் வாதி பிறந்தார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. சரோஜாவிற்கும் 01-ஆம் பிரதிவாதிக்கும் திருமணம் நடந்திருக்கவே வாய்ப்பு இல்லை என்று காட்டும் சூழ்நிலைகள் எதுவும் இல்லை. இந் நிலையில் வாதி பசுமதி தனது சட்டப் பூர்வ மகளில்லை என்ற எதிர்வாதத்தை 01-ஆம் பிரதிவாதியே நிரூபிக்க வேண்டும் என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**24.** எதிர்வழக்குரையில் 01-ஆம் பிரதிவாதி தங்கராஜிக்கும் வாதியின் தாயார் சரோஜாவிற்கும் திருமணம் நடக்கவில்லை என்றும் அவர்களுக்குள் எவ்வித தொடர்புமில்லை என்றும் மறுக்கப்பட்டுள்ளது. ஆனால் வாதி

பசுமதி சரோஜாவின் மகள் இல்லை என்று மறுக்கவில்லை. வாதி பசுமதி சரோஜாவிற்கும் வேறு எந்த நபருக்கும் பிறந்தார் என்று 01-ஆம் பிரதிவாதி கூறவில்லை. உண்மையில் சரோஜாவிற்கும் வேறு நபருக்கும் வாதி பசுமதி பிறந்திருந்தால் 01-ஆம் பிரதிவாதி குறிப்பாக சொல்லியிருக்க வேண்டும். சரோஜாவிற்கும் தனக்கும் திருமணம் நடந்திருக்க வாய்ப்பு இல்லை என்றும் தங்களுக்கு வாதி பிறந்திருக்க வாய்ப்பு இல்லை என்றும் 01-ஆம் பிரதிவாதி உரிய சான்றுகள் மூலம் நிரூபிக்கவில்லை. சரோஜாவிற்கும் 01-ஆம் பிரதிவாதிக்கும் திருமணம் நடக்கவில்லை என்று வாதியின் குடும்பத்திற்கோ பிரதிவாதிகளின் குடும்பத்திற்கோ சம்மந்தம் இல்லாத பிரதிவாதி தரப்பு 02-ஆம் சான்றாளர் சொல்லியுள்ள சாட்சியம் ஏற்புடையதாக இல்லை என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது. இதற்குமுன் சொல்லப்பட்ட சூழ்நிலைகள் யாவும் சரோஜாவை 01-ஆம் பிரதிவாதி மணந்தார் என்றும் அவர்கள் இருவருக்கும் வாதி பிறந்தார் என்றும் அனுமானிக்க முகாந்திரம் உள்ளதை காட்டுகின்றன என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

25. இந்த எழுவினால் இதற்குமுன் விவாதித்தபடி வாதியின் தாயார் சரோஜாவே 01-ஆம் பிரதிவாதியின் முதல் மற்றும் சட்டப்பூர்வ மனைவி என்றும் அவர்கள் இருவருக்கும் பிறந்த வாதியே சட்டப்பூர்வ மகள் என்றும் இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**01–ஆம், 03–ஆம், 04–ஆம் வழக்கெழுவினாக்கள்மீதான விவாதமும் தீர்முடிவும்**

26. வழக்குச் சொத்துக்கள் 01-ஆம் பிரதிவாதிக்கு வந்த விதம் குறித்து எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதியை வாதி மறுக்கவில்லை. மதுரகாளி கவுண்டர் 1959-ஆம் ஆண்டு இறந்தபின் அவருடைய சொத்துக்-

களை அவருடைய மகன்களான குழந்தையண்ண கவுண்டரும் பெருமாள் கவுண்டரும் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் 08-ஆம் பிரிவின்கீழ் அடைந்-திருப்பர். அந்த வகையில் குழந்தையண்ணகவுண்டர் அடைந்த 1.11 ஏக்கர் நிலம் அவரின் தனிபட்டச் சொத்து ஆகும். பெருமாள்கவுண்டர் அடைந்த 1.11 ஏக்கர் அவருடைய தனிபட்டச் சொத்து ஆகும். பெருமாள் கவுண்டர் ராக்கியண்ணனுக்கு விற்ற 1.11 ஏக்கர் நிலத்தை அதை அவரிடமிருந்து குழந்தையண்ணன் கவுண்டர் வாங்கியிருக்கிறார். அந்த 1.11 ஏக்கர் நிலம் குழந்தையண்ணனின் சுயசம்பாத்தியச் சொத்து ஆகும்.

**27.** குழந்தையண்ணன் 03.11.1986-ஆம் நாளன்று அவரது அசையும் அசையாச் சொத்துக்களை பொறுத்து விருப்பாவணம் எதும் எழுதாமல் இறந்தார் என்ற சங்கதியையும் குழந்தையண்ணனுக்கு 01-ஆம் பிரதிவாதி தங்கராஜ், சேகர், செல்வகுமார் என்கிற 3 மகன்களும் சின்னபொன்னு, சரோஜா, கண்ணாம்பாள் என்கிற 3 மகள்களும் பிள்ளைகள் என்ற சங்கதி-யையும் அவர்கள் 02.11.2015-ஆம் தேதியன்று குழந்தையண்ணன் விட்டுச் சென்ற சொத்துக்களை பாகப்பிரிவினை செய்துகொண்டனர் என்ற சங்கதி-யையும் இரு தரப்பினரும் ஒப்புக்கொள்கின்றனர். குழந்தையண்ணன் மதுரகாளியிடமிருந்து இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் 08-ஆம் பிரிவின்கீழ் அடைந்த 1.11 ஏக்கர் நிலத்தை அவர் உயிரோடு இருந்தபோது எவ்வித பராதீனமும் செய்யாமல் இறந்ததால் அவர் இறந்ததும் அச்சொத்து அதாவது 1.11 ஏக்கர் நிலம் பூர்வீகச் சொத்தின் தன்மையுடையதாக மாறிவிடும். குழந்தையண்ணன் ராக்கியண்ணனிடமிருந்து வாங்கிய 1.11 ஏக்கர் நிலம் குழந்தையண்ணன் இறந்தபிறகு இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் 08-ஆம் பிரிவின்கீழ் அவரது வாரிசுகளை சென்றடைந்திருக்கும். அந்தச் சொத்தை

அடைந்த அவரவது வாரிசுகளுக்கு அச் சொத்துத் தனிப்பட்டச் சொத்தாக இருக்கும்.

**28.** குழந்தையண்ணன் மதுரகாளியிடமிருந்து நேரடியாக வாரிசுரிமையில் அடைந்த 1.11 ஏக்கரில் குழந்தையண்ணன் இறந்தபின் அவரின் வாரிசுகள் அறுவருக்கும் தலைக்கு 1/6 பங்கு உரிமையாகியிருக்கும். அந்த 1/6 பங்கில் மேற்சொன்ன அறுவரின் மகன்களும் மகள்களும் அவரவர் பெற்றோருரின் 1/6 பங்கில் பிறப்பாலே பங்குரிமை பெற்றிருப்பர். 01-ஆம் பிரதிவாதி தங்கராஜிக்கு ஒதுங்கிய 1/6 பங்கில் அவரின் சட்டப்பூர்வமான பிள்ளைகள் பிறப்பாலே பங்குரிமை பெற்றிருப்பர்.

**29.** வாதியின் தாயார் சரோஜா உயிரோடு உள்ளார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. 01-ஆம் பிரதிவாதி 02-ஆம் பிரதிவாதியுடன் குடும்பம் நடத்தியதில் 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகள் பிறந்தனர் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அவர்களிருவருக்கும் பிறந்த 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகள் சட்டப்பூர்வ மகன், மகள் என்று சொல்ல முடியாது. வாதி பசுமதி மட்டும் தங்கராஜின் சட்டப்பூர்வமான மகள் என்று இதற்குமுன் இந் நீதிமன்றம் முடிவுசெய்துள்ளது. பூர்வீகச் சொத்தில் சட்டப்பூர்வமான வாரிசுகளே பங்குரிமை பெற முடியும் என்பது நன்கு நிறுவப்பட்ட முன்தீர்ப்பு ஆகும்.

**30.** குழந்தையண்ணனிடம் இருந்து 01-ஆம் பிரதிவாதி அடைந்த பூர்வீகச் சொத்தின் தன்மையுள்ள சொத்தை 01-ஆம் பிரதிவாதி 2005 ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமை திருத்தச் சட்டம் செயலுக்கு வரும்முன் பராதீனம் செய்துவிட்டதாக 01-ஆம் பிரதிவாதி கூறவில்லை. ஆகையால் அந்தச் சொத்தில் 01-ஆம் பிரதிவாதிக்கு உரிய 1/6 பங்கில் வாதிக்கு சம

IIIrd ADJ Court, Salem

உரிமை உண்டு என்றும் அந்த வகையில் அச் சொத்தில் 1/12 பங்கிற்கு வாதிக்கு உரிமை உண்டு என்றும் இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

31. ராக்கியண்ணனிடமிருந்து குழந்தையண்ணன் வாங்கிய 1.11 ஏக்கரில் அவருடைய வாரிசுகள் அறுவரும் அடைந்த தலைக்கு 1/6 பாகம் அவர்களின் தனிபட்டச் சொத்தாக கருதப்படும் என்பதால் அவர்களின் மகன்களோ மகள்களோ அச் சொத்தில் பிறப்பாலே எந்த உரிமையும் பெற மாட்டார்கள் என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

32. 02.11.2015-ஆம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை இந் நீதிமன்றம் ஓர்வுசெய்தது. குழந்தையண்ணனின் 3 மகள்களுக்கு சொத்தில் 1/6 பங்குக் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு 1/6 பங்கிற்கு ஈடாக தலைக்கு 1,20,000/- உரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. A அட்டவணை சொத்து 01-ஆம் பிரதிவாதி தங்கராஜிக்கும் B அட்டவணை சொத்து சேகருக்கும் C அட்டவணை சொத்து செல்வகுமாருக்கும் ஒதுக்கப்பட்டிருக் -கிறது. மொத்தச் சொத்தான புல எண் 30/4 இல் அடங்கிய 2.22 ஏக்கர் மேற்சொன்ன மூவருக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 01-ஆம் பிரதிவாதிக்கு மொத்தம் 66 சென்ட் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 51 சென்ட் ஒரு பகுதியாகவும் 15 சென்ட் ஒரு பகுதியாகவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 5 சென்ட்டில் கிணறு பொது பாத்தியமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 19 சென்ட் பொது பொதையாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

33. 01-ஆம் பிரதிவாதிக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட மொத்தச் சொத்துக்களில் குழந்தையண்ணன் அவருடைய தகப்பனார் மதுரகாளியிடமிருந்து அடைந்தது எந்தச் சொத்து? ராக்கியண்ணனிடம்

இருந்து வாங்கியது எந்தச் சொத்து? என்று தனிதனியாக பிரித்து அறிய முடியாத நிலை உள்ளது

**34.** மதுரகாளியிடமிருந்து குழந்தையண்ணன் அடைந்து பராதீனம் செய்யாமல் விட்டுவிட்டு இறந்த 1.11 ஏக்கரில் 01-ஆம் பிரதிவாதியின் 1/6 பங்கிற்கு ஒதுங்கக்கூடிய அளவு 18.5 சென்ட் ஆகும். அந்த 18.5 சென்ட் இடத்தில் வாதிக்கு பிறப்பாலே சம பங்குரிமை உண்டு. அதில் பாதி 9.25 சென்ட் இடம் மட்டுமே வாதிக்கு பங்குரிமையுள்ள சொத்து ஆகும் என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**35.** இதற்குமுன் விவாதித்தவற்றின் அடிப்படையில் வழக்குச் சொத்துக்கள் அனைத்திலும் 1/2 பங்கிற்கு பாகப்பிரிவினை பெற வாதி உரிமையற்றவர் என்றும் 9.25 சென்ட் இடத்திற்கு மட்டுமே பாகப்பிரிவினை பெற வாதி உரிமையுடையவர் என்றும் இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**05–ஆம், 06–ஆம் வழக்கெழுவினாக்கள்மீதான விவாதமும் தீர்முடிவும்**

**36.** வாதி 01-ஆம் பிரதிவாதியின் மகளே இல்லை என்று மறுக்கும் பிரதிவாதிகளால் வாதியின் மேற்சொன்ன பாகவுரிமைக்கு ஆபத்து உள்ளது என்றே இந் நீதிமன்றம் கருதுகிறது. ஆகையால், வழக்குச் சொத்தில் வாதிக்கு உரிய மேற்சொன்ன பாகத்தை பிரித்துக் கொடுக்கும்வரை வழக்குச் சொத்தில் வாதிக்கு உரிய பாகத்திற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் அதில் எவ்வித வில்லங்கமும் ஏற்படுத்தக்கூடாது என்று தடையுறுத்துக் கட்டளை பிறப்பிப்பதே உகந்தது என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

37. இந்த வழக்கின் சங்கதிகளையும் சூழ்நிலைகளையும் கவனத்தில் கொண்டும் தரப்பினர்களின் உறவுமுறையை கவனத்தில்கொண்டும் அவரவர் செலவுத்தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆணையிடுவது உகந்தது என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

## இறுதிமுடிவு

38. இறுதியாக, (1) இந்த வழக்குப் பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. வழக்குச் சொத்தில் பூர்வீகத் தன்மையுள்ள சொத்தில் மட்டும் 1/12 பாகத்-திற்கு அதாவது வழக்கு 01-ஆம், 02-ஆம் இனச் சொத்தில் 9.25 சென்ட் இடத்திற்கும் அதற்கு ஏற்றார்போல் 03-ஆம், 04-ஆம், 05-ஆம் இன சொத்துக்களில் கூட்டுரிமைக்கும் வாதி உரிமையுடையவர் என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

(2) வாதிக்கு உரிய 9.25 சென்ட் இடத்தின் தனிச் சுவாதீனத்தையும் அந்த இடத்திற்காக வழக்கு 03 முதல் 05 வரையிலான இன சொத்துக்கள்-மீதான வசதி உரிமைகளையும் தீர்ப்பாணை நாளில் இருந்த 03 மாதத்திற்குள் உரிய பாகப்பிரிவினை மூலம் வாதிக்கு வழங்க பிரதிவாதிகள் குறிப்பாக 01 ஆம் பிரதிவாதி ஒத்துழைப்பு நல்க வேண்டும். அவ்வாறு பிரதிவாதிகள் ஒத்துழைப்பு நல்கத் தவறினால் தனது பாகத்தைப் பிரித்துத் தனிச் சுவாதீனம் அடைய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வாதிக்கு உரிமை யுண்டு. வழக்குச் சொத்தில் வாதியின் உரிமைக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் வில்லங்கம் எதுவும் ஏற்படுத்தக்கூடாது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக இந் நீதிமன்றம் தடையுறுத்துக் கட்டளை பிறப்பிக்கிறது. அவரவர்

III rd ADJ Court, Salem

செலவுத்தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந் நீதிமன்றம் ஆணையிடுகிறது.

**இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.03.30 20:46:14 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

IIIrd ADJ Court, Salem

**வாதி தரப்புச் சான்றாளர்கள்**

| | | |
|---|---|---|
| **வா.சா–01** | - | **பசுமதி (வாதி)** |
| **வா.சா–02** | | **சரோஜா** |
| **வா.சா–03** | | **சுப்ரமணி** |
| **வா.சா–04** | | **பழனி** |

**வாதி தரப்புச் சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| **வா.சா.ஆ–01** | - | *வாதியின் பள்ளி மாற்றுச் சான்றிதழ்– அசல்* |
| **வா.சா.ஆ–02** | - | *வாதியின் ஆதார் அடையாள அட்டை – பதிவிறக்க நகல்* |
| **வா.சா.ஆ–03** | - | *02.11.2015–ஆம் தேதியிட்டப் பாகப்பிரிவினை பத்திரத்தின் பதிவிறக்க நகல்* |
| **வா.சா.ஆ–04** | - | *வில்லங்கச் சான்று – பதிவிறக்க நகல்* |

**பிரதிவாதிகள் தரப்புச் சான்றாளர்கள்**

பி.வா.சா–01 – தங்கராஜ்(01–ஆம் பிரதிவாதி)

பி.வா.சா–02 – சேகர்

## பிரதிவாதிகள் தரப்புச் சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ–01 | – | 27.09.1944–ஆம் தேதியிட்ட விற்பனை பத்திரத்தின் பதிவு நகல் |
| பி.வா.சா.ஆ–02 | – | 04.04.1960–ஆம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ–03 | – | 09.01.1962–ஆம் தேதியிட்ட விற்பனை பத்திரத்தின் பதிவு நகல் |
| பி.வா.சா.ஆ–04 | – | 30.04.1963–ஆம் தேதியிட்ட விற்பனை பத்திரத்தின் பதிவு நகல் |
| பி.வா.சா.ஆ–05 | – | 02.11.2015–ஆம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் பதிவு நகல் |
| பி.வா.சா.ஆ–06 | – | கணினி பட்டா எண் 31 – பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ–07 | – | சொத்து வரி ரசீது – பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ–08 | – | மின் கட்டண அட்டை – அசல் |

## சாட்சி சான்றாவணங்கள்

| | |
|---|---|
| சா.சா.ஆ–01 | வாதியின் தாயார் சரோஜாவின் வாக்காளர் அடையாள அட்டை–நகல் |

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.03.30 20:46:31 +0530

மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,

சேலம்.

III rd ADJ Court, Salem